# INTERNATIONAL INDIAN SCHOOL DAMMAM

## QUESTIONS COMPILED FROM PREVIOUS YEAR BOARD PAPERS

## (MID TERM 2023-24)

**CLASS: X** **SUBJECT: TAMIL**

**UNIT :1-3**

**I. பின்வரும் உரைநடைப் பகுதியை படித்து கொடுக்கப்பட்டுள்ள பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக.**

சோழன் கரிகாலன் மிகச்சிறந்த வெற்றிவேந்தன். வெண்ணிப்பறந்தலை என்னும் இடத்தில் இவனை எதிர்த்தான் சேர வேந்தன். பெருஞ்சேரலாதன் போர் கடுமையாக நடைபெற்றது. இறுதியில் கரிகாலன் எய்த அம்பு சேரன் மார்பில் ஊடுருவி முதுகு வழியாக வெளிச் சென்றுவிட்டது. மார்பிலும், முதுகிலும் புண்பட்ட சேர வேந்தன் விழுப்புண் என்பானா? புறப்புண் என்பானா? முடிவில் முதுகில் பட்ட புண்ணுக்கு நாணி வடக்கிருந்தான். இதனை நேரில் கண்ட வெண்ணிக்குயத்தியார் கரிகாலனை கண்டு சேரனது வீரத்தைப் பாராட்டி “நின் ஆற்றல் தோன்ற வென்றாய், என்றாலும் புறப்புண் நாணி வடக்கிருந்த சேரன் உன்னை விட நல்லன் என பெருஞ்சேரலாதனைப் புகழ்ந்தார்.”

கோப்பெருஞ்சோழன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட போது அவனுக்கும் அவன் மக்கட்கும் பகை மூண்டது. சோழன் தன் மக்களை எதிர்த்து போராட வஞ்சி சூடி போர்க்கோலம் பூண்டான். இதனை அறிந்த எயிற்றியனார் என்னும் புலவர் “வெற்றிவேந்தனே உன்னோடு போர் செய்வதற்கு எழுந்த நின் புதல்வர் தோற்றாலும் உன் செல்வம் அவர்க்கொழிய வேறுயாவர்க்குக் கொடுப்பாய்? நீ உன் மக்களிடம் தோற்றால் உன் பகைவர்க்கு மகிழ்ச்சி பெருகும். உனக்கு பழி நிலை நிற்கும். ஆதலால் உன் பகைமைக் குணம் நீங்க வேண்டும். நல்வினையைச் செய்வதற்கு விரைந்தெழுக” என்று அவன் உள்ளம் கொள்ளும் வகையில் அறிவுரை கூறிப் போரைத் தடுத்தார்.

**வினாக்கள்:**

1. கரிகாலனுக்கும் சேரனுக்கும் போர் நடைபெற்ற இடம் எது?

   அ) உறையூர் ஆ) சோழ நாடு

   இ) சேர நாடு ஈ) வெண்ணிப்பறந்தலை

2. சேர மன்னனைப் புகழ்ந்து பாடிய புலவர் யார்?

   அ) எயிற்றியனார் ஆ) வெண்ணிக் குயத்தியார்

   இ) பிசிராந்தையார் ஈ) கண்ணகனார்

3. சேர மன்னன் வடக்கிருந்த காரணம் என்ன?

   அ) புகழ் பெற்றதால் ஆ) செல்வ வளத்தால்

   இ) புறப் புண்பட்டதால் ஈ) மக்கள் செல்வத்தால்

4. சோழர்களின் தலைநகரம் எது

   அ) வெண்ணிப்பறந்தலை ஆ) கடையூர்

இ) தகடூர் ஈ) உறையூர்

5. கோப்பெருஞ்சோழனுக்கு அறிவுரை கூறி போரைத் தடுத்தவர் யார்?

அ) கரிகாலன் ஆ) எயிற்றியனார்

இ) வெண்ணிக் குயத்தியார் ஈ) அமைச்சர்

## II. சான்று தருக:

1. ஒற்றளபடை
2. செய்யுளிசை அளபெடை
3. இன்னிசை அளபெடை
4. சொல்லிசை அளபெடை
5. தனிமொழி
6. தொடர்மொழி
7. பொதுமொழி
8. தொழிற்பெயர்
9. எதிர்மறை தொழிற்பெயர்
10. முதனிலை திரிந்த தொழிற் பெயர்
11. வினையாலணையும் பெயர்
12. வேற்றுமைத்தொகை
13. வினைத்தொகை
14. பண்புத்தொகை
15. இருபெயரொட்டுப் பண்புத்தொகை
16. உவமைத்தொகை
17. உம்மைத்தொகை
18. அன்மொழித்தொகை
19. எழுவாய்த்தொடர்
20. விளித்தொடர்
21. வேற்றுமைத் தொடர்
22. வினையெச்சத் தொடர்
23. பெயரெச்சத் தொடர்
24. வினைமுற்றுத் தொடர்
25. இடைச்சொல் தொடர்
26. உரிச்சொல் தொடர்
27. அடுக்குத்தொடர்

## III. இலக்கணக்குறிப்பு தருக:

1. நல்ல படாஅ பறை
2. எடுப்பதூஉம்
3. உரனசைஇ
4. எங்ங்இறைவன்
5. படித்தான்
6. கண்ணன் வந்தான்
7. வேங்கை இதழ்
8. கொல்லாமை

9. தட்டு
10. சூடு
11. நன்மொழி
12. வீசு தென்றல்
13. மாமரம்
14. முத்துப்பல்
15. அண்ணன் தம்பி
16. கயல்விழி பார்த்தாள்
17. கபிலன் வந்தான்
18. ஔியே வா
19. பாடசாலைக்குச் சென்றான்
20. ஓடிவா
21. பாடும் பறவை
22. பாடினாள் கண்ணகி
23. மற்றொன்று
24. சாலச் சிறந்தது
25. ஓடு ஓடு

## IV. நிரப்புக:

1. அளபெடுத்தல் என்பது—-----------
2. சார்பெழுத்துக்கள் —--------எத்தனை வகைப்படும்.
3. உயிரளபெடை—---------- வகைப்படும்.
4. செய்யுளிசை அளபெடையினை—-------------என்றும் கூறுவர்.
5. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனி மொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது—---------- எனப்படும்.
6. வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாகும் தொழில் பெயர் —--------- ஆகும்.
7. தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது—------------- பெயர்.
8. முற்றுப்பெறாத வினை பெயர்ச்சொல்லை தொடர்வது—------ எனப்படும்.
9. வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது —--------- ஆகும்.
10. தொகாநிலைத் தொடர்கள் —--------- வகைப்படும்.
11. முற்றுப்பெறாத வினை, பெயர் சொல்லை தொடர்வது—-------- எனப்படும்.
12. வேற்றுமை உருபுகள் வெளிப்பட்டு அமையும் தொடர்கள்—-------- தொடர்கள் ஆகும்.
13. சிறப்புப்பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் நின்று இடையில் ஆகிய என்னும் பண்பு உருபு தொக்கி வருவது—------
14. உம்மைத்தொகை——------- பெயர்களைத் தொடர்ந்து வரும்.
15. உவமைக்கும் பொருளுக்கும் இடையில் உவம உருபு மறைந்து வருவது ----------------எனப்படும்.

## V. கூறியவாறு செய்க:

1. வருகை (வினையடியை எழுதுக.)
2. நடத்தல் (எதிர்மறை தொழிற்பெயர் மாற்றுக.)
3. சுடுதல் (முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் ஆக்குக.)
4. மதுரை சென்றார். (வேற்றுமை உருபு எடுத்து எழுதுக.)
5. தங்க கொலுசு அணிந்த பெண் வந்தாள். (அன்மொழித்தொகையாயாக மாற்றுக.)

6. தொண்டு (உருபும் பயனும் உடன்தொக்க தொகை ஆக்குக)
7. வேம் + கை (பொது மொழி ஆக்குக )
8. படித்தல் (வினையாலணையும் பெயர் ஆக்குக )
9. பேறு ( தொழில் பெயர் ஆக்குக.)
10. வளவன் (விளித் தொடராக மாற்றுக.)
11. இலையும் சருகும்.( உம்மைத்தொகை ஆக்குக).

**VI. செய்யுள் வரிகளை படித்து கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு சரியான விடையை எழுதவும்.**

நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு

வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை

நீர் செல நிமிர்ந்த மாஅல் போல

பாடுஇமிழ் பனிக் கடல் பருகி வலன் ஏர்பு,

1. இப்பாடலின் ஆசிரியர் யார்?
   அ)பாரதியார் ஆ) நப்பூதனார் இ) சாத்தனார் ஈ)பாரதிதாசன்
2. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
   அ)காசிக்காண்டம் ஆ) காற்றே வா இ)முல்லைப்பாட்டு ஈ)மலைபடுகடாம்
3. நனந்தலை உலகம்- பொருள் தருக.
   அ)மழை ஆ) அகன்ற உலகம் இ) நற்சொல் ஈ)தோல்
4. இப்பாடல் எத்தனை அடிகளைக் கொண்டது?
   அ)103 ஆ) 100 இ) 99 ஈ) 200
5. மா அல் என்பது யாரைக் குறிக்கிறது?
   அ) திருமால் ஆ) சிவபெருமான் இ) இந்திரன் ஈ) பிரம்மன்

**VII . பின்வரும் கோடிட்ட இடங்களைத் திருக்குறள் சீர்களால் நிரப்புக.**

1. ஒழுக்கம் விழுப்பம் தரலான் __________

   உயிரினும் ஓம்பப் படும்.

   அ) ஒழுக்கம் ஆ) கோபம் இ) மயக்கம் ஈ) இன்பம்

2. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்

   ____________ முயற்சி தரும்

   அ) இன்மை ஆ) வறுமை இ) பெருமை ஈ) உரிமை

**VIII . விடை தருக: (செய்யுள்)**

1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?
2. தமிழழகனார் தமிழையும், கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.
3. வசன கவிதை குறிப்பு வரைக.
4. விரிச்சி - சிறுகுறிப்பு எழுதுக.
5. விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கம் யாவை?

6. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தல் மலைபடுகடாம் பாடல் வழி விளக்குக.
7. பிறருக்கு உதவி செய்யாதவன் இயல்பு யாது?

## IX. விடை தருக: (உரைநடை)

1. புறநானூறு பாடல்கள் கூறும் விருந்தோம்பல் செய்திகளை எழுதுக.
2. தாவரங்களின்பிஞ்சு வகை, குலைவகை குறித்துத் தேவநேயப்பாவாணர் கூறுவன யாவை?
3. தமிழ் சொல் வளமுடையது பொருள் வளமுடையது என்பதை தேவநேயப்பாவாணர் வழி விளக்குக.
4. காற்று மனிதனால் எவ்வாறு மாசுபடுகிறது?
5. தமிழ் இலக்கியத்தில் காற்றினை எங்கனம் புலவர்கள் வருணித்துள்ளனர்?
6. வாழையிலை விருந்து பற்றி எழுதுக.
7. காற்று வீசும் திசையைக் கொண்டு தமிழர்கள் காற்றிற்கு எவ்வாறு பெயர் சூட்டியுள்ளார்கள்?

## X. துணைப்பாட கட்டுரை எழுதுக :

1. உரைநடையின் அணிநலன்கள்
2. புயலிலே ஒரு தோணி
3. கோபல்லபுரத்து மக்கள்

## XI. கடிதம் எழுதுக

1. உனது ஊரில் போக்குவரத்து வசதி அமைத்து தர வேண்டி மாவட்ட ஆய்வாளருக்கு விண்ணப்பம் எழுதுக
2. உங்கள் பகுதியில் தேங்கிக் கிடக்கும் குப்பைகளை அகற்றக்கோரி மாநகராட்சித் தலைவர் அவர்களுக்கு கடிதம் எழுதுக
3. நீ வசிக்கும் இடத்தில் இலவச இணைய வசதி அமைத்துத் தருமாறு மாவட்ட ஆட்சியருக்கு ஓர் விண்ணப்பக் கடிதம் எழுதுக
4. உன் பள்ளியில் நீ சென்று வந்த கல்விச் சுற்றுலா குறித்து விடுதியில் தங்கிப் படிக்கும் உன் சகோதரனுக்கு ஓர் கடிதம் எழுதுக
5. உங்கள் பகுதியில் நடைபெற்ற பொங்கல் திருநாள் பற்றி உன் தோழனுக்கு கடிதம் எழுதுக
6. பொது நூலகத்தை பயன்படுத்துவதால் விளையும் நன்மைகள் குறித்து அயலூர் நண்பனுக்கு கடிதம் எழுதுக.

## XII. குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை எழுதுதல்:

1. தலைப்பு- முன்னுரை - சுற்றுச்சூழல் - தனிமனித தூய்மை - வீடு தூய்மையானால் நாடும் தூய்மையாகும்- நோய்கள் வராமல் தடுக்க அரசு - தூய்மை இந்தியா காண்போம் - முடிவுரை .
2. தலைப்பு- முன்னுரை - முயற்சியின் பெருமை- முயற்சி திருவினையாக்கும் -முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் -முயற்சி முன்னேற்றம் தரும்- முடிவுரை.

3. தலைப்பு -முன்னுரை -ஊடகங்கள் -செய்தித்தாள்கள்- தொலைக்காட்சி- தொலைத்தொடர்பு- இணையம்- சமூக வலைத்தளங்கள் பயன்படுத்தும் முறை -முடிவுரை.
4. தலைப்பு- முன்னுரை- ஒற்றுமை- சகோதரத்துவம்- சகிப்புத்தன்மை- நல்ல சமுதாயம்- முடிவுரை.
5. தலைப்பு- முன்னுரை -அறிவியல் ஓர் அறிமுகம்- மருத்துவத்தில் அறிவியல்- வேளாண்மையில் அறிவியல் -அன்றாட வாழ்வில்- அறிவியல் கணினியின் வளர்ச்சி- நேர்மறை பயன்பாடு -முடிவுரை.
6. தலைப்பு – முன்னுரை– மொழி–- தாய்மொழியின் தனித்துவம்– எளிதில் புரிதல் — தமிழின் இளமைத் தன்மை– தமிழின் சிறப்புகள்— தமிழ்ச் செம்மொழி— முடிவுரை

**XIII. காட்சியைக் கண்டு கவினுற எழுதுதல்:**





.